**-ஹப்புத்தளை நகரசபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 மே 23 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மே 02 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்டம்பர் 16 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்பட்ட தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டிருந்தன என்றும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஹப்புத்தளை நகரசபையின் நடவடிக்கைகளது நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டிற்கான அதன் செயற்பாட்டினது நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினது உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலையைக் காட்டுகின்றன என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த தீர்வையும் வரியும் ரூபா 2,553,147 ஆகும். ஆயினும், இது ரூபா 2,464,036 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் ஆண்டு முடிவிலான கணக்கு மீதி நிதிசார் கூற்றுக்களில் ரூபா 89,111 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய வாடிவீட்டு முகாமைத்துவக் கட்டணம் ரூபா 4,078,242 ஆகும். இது ரூபா 3,471,258 ஆகக் கணக்கிலிடப்பட்டதால் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் பெறவேண்டிய வருவாய் நிதிசார் கூற்றுக்களில் ரூபா 606,984 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்குக் கொடுப்பனவு செய்யவேண்டியிருந்த தொகை ரூபா 319,307 ஆகும். ஆயினும், கடன்பட்டோரின் கீழ் ரூபா 3,004 க்கான நிதியேற்பாடே மேறகொள்ளப்பட்டமையால் நிதிசார் கூற்றுக்களில் பொறுப்புகள் ரூபா 316,303 குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளளிப்பு ஒதுக்கக் கணக்கு மீதியாகிய ரூபா 83,065 முதலீடு செய்யப்படாமையால் ஒதுக்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சொத்துக்களை இனங்காண முடியாதிருந்தது.

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இவ் உள்ளவாறான பெற வேண்டிய கணக்கு மீதி ரூபா 15,305,408 ஆகும். கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு மீதிகள் அத்தினத்தில் உள்ளவாறு ரூபா 30,835,785 ஆகவிருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 1,222,207 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | நகரசபைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 255) பிரிவு 164 | இலங்கை சுற்றுலா மேம்பாட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட வாடி வீடுகளிலிருந்து முன்னைய ஆண்டுப் பெறுவனவுகளில் 1 சதவீதத்துக்கு மேற்படாத அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். எனினும், சபையின் அதிகாரத்துக்கு உட்பட பிரதேசதத்தில் உள்ள 2 வாடி வீடுகளிலிருந்து அனுமதிப்பதிரக் கட்டணம் அறவிடப்படாதிருந்தது. |
| (ஆ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் இலக்கம் 371 | 1997 தொடக்கம் 2013 வரை சபையால் பல்வேறு நபர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 348,042 முற்பணமானது தீர்த்து வைக்கப்படாதிருந்தது. |
| (இ) | இலங்கை குடியரசின் தாபன விதிக் கோவையினது அத்தியாயம் XXIV பிரிவுகள் 1:6, 4 என்பன | இடமாற்றத்திற்குள்ளான /சேவைநீங்கிய/ மரணமடைந்த 29 ஊழியர்களிடமிருந்து 2 முதல் 17 ஆண்டு காலமாக ஊழியர் கடனாகிய ரூபா 176,816 அறவிடப்படாதிருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 9,913,515 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 5,154,215 ஆகும். இது நிதிசார் விளைவுகளில் ரூபா 4,759,300 சாதகமான வேறுபாட்டைச் சுட்டிக் காட்டியது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

நிதிசார் விளைவுகளின் தேறிய அதிகரிப்பின் பகுப்பாய்வுடனான மீளாய்வு கீழே காணப்படுகின்றது.

| **மீண்டுவரும் வருவாய்** | **2013** | **2012** | **வேறுபாடு** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| தீர்வையும் வரியும் | 1,755,787 | 1,775,997 | (20,210) |
| குத்தகை வாடகை | 6,952,042 | 7,283,384 | (331,342) |
| அனுமதிப் பத்திரம் | 387,850 | 384,650 | 3,200 |
| சேவைக் கட்டணம் | 10,333,564 | 1,876,394 | 8,457,170 |

| | | | | |
|---|---|---|---|---|
| பிடி ஆணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 174,745 | 131,925 | 42,820 | |
| பிற வருவாய் | 426,057 | 291,560 | 134,497 | |
| வருவாய்க்கான உதவி | 14,543.625 | 13,664,533 | 879,092 | 9,165,227 |

**மீண்டுவருஞ் செலவினம்**

| | | | | |
|---|---|---|---|---|
| சம்பளமும் படியும் | 16,855,207 | 16,312,262 | (542,945) | |
| பயணச் செலவினம் | 317,441 | 241,267 | (76,174) | |
| வழங்கலும் சேவைகளும் | 1,431,700 | 944,592 | (487,108) | |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 1,402,071 | 913,468 | (488,603) | |
| போக்குவரத்தும் பாவனைச் சேவைகளும் | 1,604,710 | 1,025,246 | (579,464) | |
| வட்டி,பங்கிலாபம், மிகையூதியக் கொடுப்பனவு | 2,116,332 | - | (2,116,332) | |
| உதவிப் பணம், உதவு தொகை மற்றும் நிவாரணத் தொகை | 752,698 | 538,139 | (214.559) | |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன் மற்றும் பணிக்கொடை | 179,996 | 279,254 | 99,258 | |
| | | | ---------------- | 4.405,927 |
| | | | | ------------- |
| சாதகமான வேறுபாடு | | | | 4,759,300 |
| | | | | ======= |

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 வருவாய்ச் சேகரிப்புச் செயற்திறன்

2013 ஜனவரி 01 இல் உள்ளவாறான நிலுவையாக இருந்த வருவாயினது அறவீடு மற்றும் 2013 ஆம் ஆண்டில் பட்டியல் வழங்கப்பட்டு அறவிடப்பட எதிர்ப்பார்க்கப்பட்ட வருவாயினது அறவீடு என்பன குறைவான மட்டத்திலேயே அமைந்திருந்தன.

### 2.3.2 தீர்வையும் வரியும்

2006 ஆம் ஆண்டு மதிப்பீட்டிற்கமைய, சபையின் பிரதேசத்தில் உள்ள முடிவடைந்த நிலையில் உள்ள நிர்மாண வேலைகளை அளவீடுசெய்து அதன் அடிப்படையில் தீர்வையையும் வரியையும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.3 குத்தகை வாடகை

2001 முதல் 2012 வரை சபைக்குச் சொந்தமான இறைச்சிக் கடைகள், மீன் கடைகள் என்பவற்றைப் பெற்றிருந்த குத்தகையாளர்களிடமிருந்து நிலுவையாக உள்ள ரூபா 647,459 குத்தகை வாடகை நிலுவையும் 2013 ஆண்டுக்கான குத்தகையைப் பெற்றிருந்த குத்தகையாளர்களிடமிருந்து ரூபா 419,629 குத்தகைத் தொகையும் அறவிடப்படாதிருந்தது.

### 2.3.4 வாடிவீட்டு முகாமைத்துவம்

நகர்ப்புற அபிவிருத்தி அதிகாரசபையால் நிர்வகிக்கப்பட்ட வாடிவீடுகளுக்குரிய 1999 முதல் 2007 வரையிலான வாடிவீட்டு வாடகையாஹன ரூபா 3,974,194 உடன் வாடி வீட்டு முகாமையாளர் இவற்றைத் செலுத்தவேண்டியதும் சபை செலுத்தியதுமான ரூபா 74,824 அறவிடப்படவில்லை.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபைத் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும் பின்வருமாறு.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப் பணம் | 154,083 |
| முத்திரைக் கட்டணம் | 370,129 |

### 2.3.6 கடை வாடகை

(அ) 1980 டிசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரது சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்குரிய கடைகளது மாதாந்த வாடகை மதிப்பிடு செய்யப்படவில்லை. சந்தை விலைக்குக் குறைந்ததும் சபையால் தீர்மானிக்கப்பட்டதுமான வாடகையே அறவிடப்பட்டவாறிருந்தது.

(ஆ) குத்தகையாளர் ஒருவர் தனது விருப்பின் பேரில் கடை உடன்படிக்கையை இரத்துச் செய்யுமிடத்து அதனைச் சபை பொறுப்பேற்று மீண்டும் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும், 9 சந்தர்ப்பங்களில் பெயர் மாற்றத்திற்கான கட்டணத்தை மாத்திரமே அறவிட்டு கேள்விகளைக் கோராது குத்தகைக்கு அவை வழங்கப்பட்டிருந்தன.

(இ) சபைக்குச் சொந்தமான 22 கடைகளைக் கொண்ட பலநோக்குக் கட்டிடத்தில் உள்ள 1 கடை மாத்திரமே குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. விலை மதிப்புத் திணைக்களம் அதி குறைந்த விலையையே நிர்ணயித்திருந்தபோதும், பல கடைகளது வாடகை குறிப்பிடத்தக்களவு 12 முதல் 104 சதவீதம் வரை மதிப்பீட்டிலும் கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) அதி குறைந்த தொகை அதிகரிப்புக்குள்ளானதால் கடைகளுக்கு எவரேனும் விண்ணிப்பிக்கவில்லை. பலநோக்குக் கட்டிட நிர்மாண வேலைக்கு உள்ளூர்க் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து பெற்ற ரூபா 24,089,846 கடனுக்கு வட்டியாக மாத்திரம் செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 14,404,482 ஆகும். கட்டிடம் பயனற்றிருப்பதால் சபையின் நிதி நிலைமை பாதிப்பிற்குள்ளாகியிருந்தது.

### 2.3.7 விளம்பரப் பலகைக் கட்டணம்

2012 ஒக்டோபர் 12 ஆந் திகதியன்று இலங்கை குடியரசால் வெளியிடப்பட்ட 1780 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் IV(ஆ) பகுதியிள் உள்ள நிரலின் பிரகாரம் சபைப் பிரதேசதத்தில் உள்ள நிரந்தர விளம்பரப் பலகைகளுக்கு சதுர அடிக்கு ரூபா 100 எனக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், சபைப் பிரதேசத்தில் உள்ள 11 நிரந்தர விளம்பரப் பலகைகளுக்கான வருடாந்தக் கட்டணமாகிய ரூபா 271,200 2013 ஆம் ஆண்டின்போது அறவிடப்படாதிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) சபைப் பிரதேசத்தில் உள்ள தொலைத் தொடர்புக் கோபுரங்களை வெவ்வேறாக்கி அவற்றிற்கான கட்டணத்தை அறவிடுவதற்கான உப விதிகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 2013 ஆம் ஆண்டளவில் 4 இடங்களில் 4 தொலைத் தொடர்புக் கோபுரங்கள் அமைக்கப்பட்டவாறிருந்தன.

(ஆ) சபைப் பிரதேசத்தில் இயங்கியவாறிருக்கும் எரிபொருள் நிரப்பு நிலயம் ஒன்றிற்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லை. 2013 ஆம் ஆண்டிற்கான வர்த்தக அனுமதிப் பத்திரங்களைப் பெற்றிருந்த 17 ஹோட்டல்கள் / வாடிவீடுகள், ஒரு ஆலை, ஒரு தேயிலைத் தொழிற்சாலை என்பவற்றிற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை.

**3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

சபைக்குச் சொந்தமான சாதாரண மதிப்பீட்டு விலையான ரூபா 300,000 உடனான றுமேனிய தெரு உருளை ஒன்று 2007 ஆம் ஆண்டு தொடக்கம் சபையில் பயன்படுத்தப்படாதிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

ஆர்த்தர் சில்வா மாவத்தையின் எஞ்சிய பகுதியில் கொங்கிரீட் இடுவதில் முடிவடைந்த வேலைப் பெறுமதி ரூபா 792,389 ஆகும். ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படாது தடுத்து வைக்கப்பட்டிருந்த 10 சதவீதத் தொகை 2013 ஒக்டோபர் 9 ஆந் திகதியன்று விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும், கொங்கிரீட் தளத்தின் 30 சதுர அடி பாதிப்படைந்திருந்தது. தடுத்து வைத்த பணத்தைக் கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் அதனைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**4. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்**

**4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு**

சபையினது வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாய் மற்றும் செலவினங்களுக்கிடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையானது வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமையை வெளிப்படுத்தியது.

| **மீண்டுவரும் வருவாய்** | **வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது** | **உள்ளவாறானது** | **வேறுபாடு** | **வேறுபாட்டின் சதவீதம்** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **%** |
| வாடகை | 13,647,731 | 6,952,042 | 6,695,689 | 49 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 352,200 | 387,850 | 35,650 | 10 |
| சேவைக் கட்டணம் | 2,174,999 | 10,333,564 | 8.158,565 | 375 |
| பிடிஆணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 121,302 | 174,745 | 53,443 | 44 |
| ஏனைய வருவாய் | 140,000 | 426,057 | 286,057 | 204 |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | |
| வழங்கலும் உபகரணங்களும் | 1,040,500 | 1,431,700 | 391,200 | 37 |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 1,626,000 | 1,402,071 | 223,929 | 14 |
| போக்குவரத்தும் பாவனைச் சேவைகளும் | 1,257,000 | 1,604,710 | 347,710 | 28 |
| வட்டி, பங்கிலாப, மிகையூதியக் கொடுப்பனவு | 4,029,000 | 2,116,332 | 1,912,668 | 47 |
| உதவிப்பணம், உதவுதொகை, மிகையூதியக் கொடுப்பனவு | 1,207,400 | 752,698 | 454,702 | 38 |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன், பணிக்கொடை | 405,600 | 179,996 | 225,604 | 56 |

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு